சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 03.11.2025
ம.சா.1 – குமார் S/o.குருசாமி
MCOP No.29/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

விபத்து தொடர்பாக யார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது என்றால் என் மனைவி முத்து மகேஸ்வரி தான் தகவல் கொடுத்தார். மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு வழக்கு நடந்துவருகிறதா என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. விபத்து நடந்த சாலை அழகர்கோவில்-மேலூர் செல்லும் சாலையாகும். மேற்படி சாலையானது கிழமேல் சாலையாகும். விபத்து 02.02.2024 அன்று மாலை சுமார் 5.45 மணியளவில் நடந்தது. விபத்தின் போது TN59 BS 9810 என்ற ஸ்கூட்டி வாகனத்தை பல்லவராயன்பட்டியில் இருந்து மேலூர் மார்க்கமாக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். எனக்கு விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் காலாவதியாகிவிட்டது. எதிரே வந்த இருசக்கர வாகனம் அதிவேகமாக வந்து, என் மீது மோதிவிட்டது. எதிரே வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.TN59 DZ 7867 ஆகும். நான் மேற்கில் இருந்து கிழக்கு முகமாக சென்று கொண்டிருக்கிறேன். எதிரே வந்த வாகனம் கிழக்கில் இருந்து மேற்கு முகமாக வந்து கொண்டிருந்தார்கள். விபத்தானது சாலையினுடைய வடக்கு பக்கத்தில் நடந்தது. நான் முதலில் மேலூர் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்தேன். அதன்பிறகு தொடர்சிகிச்சையாக தினசரி லதா-கணேசன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். லதா- கணேசன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எலும்புமுறிவு எதுவும் ஏற்படவில்லை, அறுவை சிகிச்சை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று மருத்துவ குழுவினர் சான்றளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 6 சதவீதம் ஊனம் இருப்பதாக

சான்றளித்துள்ளார்கள். நான் தற்போது டாஸ்மாக்கில் ஊழியராக பணியாற்றிவருகிறேன். நான் டாஸ்மாக் ஊழியர் என்பதாஙல் நான் ஒரு மாத காலத்தில் விடுப்பில் இருந்ததால் எனக்கு சம்பளம் இல்லை. தற்போதும் நான் அதே சம்பளத்தை வாங்கிவருகிறேன் என்றால் சரிதான். 1 லட்சம் ரூபாய் மருத்துவ செலவானதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது தலைக்கவசம் அணியவில்லை. நான் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் தலைக்கவசம் அணியாமலும் வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவினால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. (1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுகொள்ளப்படுகிறது.)

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.03 22:35:53 +0530

Sub Judge

Melur